**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07 ம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.4/2024 அதன் அ.வ.எண்.313/2024**

மஸ்ஜிதே முஹம்மதியா ஜீம்ஆ பள்ளிவாசல்
அதன் தலைவர் மற்றும் தர்மகர்த்தாவான
சாகுல்ஹமீது அவர்களின் பொது அதிகார
முகவர் சிந்தா மதார் ... மனுதாரர் /வாதி

–எதிர்–

குட்டிசாமி ... எதிர்மனுதாரர் / பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 30.01.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.முகம்மது உசேன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வெங்கடேஷ்வரமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனு தபசில் சொத்துக்களை தாலுகா நில அளவையருடன் பார்வை செய்து, அளந்து அதன் தன்மைகள், அளவுகள், எல்கைகள் குறித்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய ஆணையர்/அட்வகேட் ஒருவரை நியமனம் செய்ய உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 26, விதி 9 மற்றும் பிரிவு 151 சி.பி.சி ன் படி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரருக்கு எதிராக தபசில் சொத்துக்களைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்

கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 1வது தபசில் சொத்து முழுவதும் மனுதாரர் அனுபவம் செய்து வருவதாக கூறப்பட்டுள்ளது. 1ம் தபசில் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரருக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும், 1ம் தபசில் சொத்தை மனுதாரர் அமைதியாக அனுபவம் செய்து வருவதை எதிர்மனுதாரர் இடைஞ்சல் செய்வதாக கூறப்பட்டுள்ளது.

2.2) 1ம் தபசில் சொத்து அமைந்துள்ள இடம், அதன் சர்வே எண் வேறு, 2ம் தபசில் சொத்து அமைந்துள்ள சர்வே எண் வேறு என்றும், இரண்டு தபசில் சொத்துக்களையும் பார்வையிட்டு, அதன் அளவுகள், விஸ்தீரணங்களையும், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 1வது தபசில் சொத்தின் தன்மையையும், தாலுகா அளவையருடன் அளந்து பார்வை செய்து, அதன் அளவுகள், எல்கைகள் குறித்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிருரை சுருக்கம்</u>**

3.1) மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரரிடம் தபசில் சொத்தைப் பொறுத்து எவ்வித பதிவு உரிமையியல் ஆவணங்களும் இல்லை என்றும், தபசில் சொத்தை 1வது தபசில் சொத்தாகவும், பிராதில் சொல்லப்படாத எதிர்மனுதாரர் / பிரதிவாதி பராமரித்து குடியிருந்து வரும் குடியிருப்பு சொத்தை 2வது தபசில் சொத்தாகவும் காண்பித்து தாலுகா நில அளவையருடன் வாதியின் சொத்தையும், பிரதிவாதியின் சொத்தையும் நில அளவை செய்து எல்கைகள் குறித்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய கோரி சட்டத்திற்கு முரணாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால், இம்மனு அவசியமற்றதாக இருப்பதாலும், இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையும் மற்றும் சான்றாவணத்தையும் முன்னிறுத்தவில்லை.

5) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் / வாதி கோரியவாறு நீதிமன்ற ஆணையர் / வழக்கறிஞரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

6) இரு தரப்பும் கேட்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி ஆவார். இந்த வழக்கானது மனுதாரர் தரப்பில், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மனுதாரர் தரப்பில் மேற்கோள் காட்டப்பட்ட மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த முன் உத்தரவான C.R.P.No.2352/ 2001 and C.M.P.No.12528/2001 Saraswathy and one another –vs– Viswanathan –க்கும், இந்த மனுவின் சங்கதிகளுக்கும் பொருந்தவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8) அபிடவிட் மற்றும் மனுவை பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியை பொது நடைபாதை என விளம்புகை செய்ய பரிகாரம் கோரி 1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலியில் தாக்கல் செய்த அ.வ.எண்.412/2017 என்ற வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என கூறப்பட்டுள்ளது.

9) மேற்படி அ.வ.எண்.412/2017 என்ற வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, அவர் தபசில் சொத்தை அளந்து பார்வையிட்ட பின்னர், எதிர்மனுதாரர் / பிரதிவாதி குடியிருந்து வரும் இடம் அரசு புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ளது என தெரிவித்துள்ளார் என மனுவில் கூறப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை பரிசீலனை செய்கையில், தபசில் சொத்தைப் பொறுத்து ஏற்கனவே நடைபெற்ற அ.வ.எண்.412/2017 வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம்

செய்யப்பட்டு, அவர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில், அதே தபசில் சொத்தைப் பொறுத்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யக் கோருவது ஏற்புடையதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

10) மனுதாரர் பிராதில் தபசில் சொத்து என்று திருநெல்வேலி வட்டம், கோடகநல்லூர் கிராமம், புல எண்.761/35, பழைய புல எண்.704/1பி 0.13.50 ஹெக்டேர் ஏர் உள்ள சொத்து என்பதைப் பொறுத்து மட்டும் தான் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தை எதிர்மனுதாரருக்கு எதிராக கோரியுள்ளார். பிராதில் ஒரு தபசில் சொத்தைக் கூறிவிட்டு, பிராதில் குறிப்பிடாத மற்றொரு தபசிலை 2வது தபசில் சொத்தாக இந்த மனுவில் மனுதாரர் காட்டியுள்ளார். மனுதாரர் தனது விருப்பம் போல் பிராதில் குறிப்பிடாத, இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 2 வது தபசில் சொத்தையும், நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்யக் கோருவது ஏற்றுக் கொள்ளும் படியாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

11) மனுதாரர் தரப்பில், இந்த மனுவின் 1ம் தபசில் சொத்து தனக்கு முற்றிலும் பாத்தியப்பட்ட, தனது உரிமையிலும், அனுபவத்திலும் இருந்து வரும் பள்ளிவாசல் கட்டிடம் மற்றும் அடக்கஸ்தல காலியிடம் என கூறப்பட்டுள்ளது. 1வது தபசில் சொத்து மனுதாரரின் அனுபவத்தில் இருந்து வருவதாக மனுவில் கூறப்பட்டுள்ளதாலும், மேலும், 1ம் தபசில் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர், மனுதாரரின் அனுபவத்தை இடையூறு செய்வதை தடை செய்வதற்காக மட்டும் தான் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

12) நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் தான் அசல் வழக்கில் கோரப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் பிராதில் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 1ம் தபசிலை மட்டும் தபசில் சொத்தாக காட்டிவிட்டு, இந்த மனுவில் பிராதில் குறிப்பிடாத சொத்தை 2ம் தபசிலாக காட்டி மேற்படி 2ம் தபசிலையும், அளவீடு செய்ய கோரியுள்ளதாலும், ஏற்கனவே அ.வ.எண்.412/2017 வழக்கில் நீதிமன்ற

ஆணையர் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளதாலும், மனுதாரர், இந்த மனுவின் 1ம் தபசில் சொத்தில் தனது உரிமையிலும், அனுபவத்திலும் உள்ளதாக கூறியுள்ளதாலும், மேலும், இந்த வழக்கில் தபசில் சொத்துக்களை நீதிமன்ற ஆணையர் சர்வேயர் உதவியுடன் அளந்து, அதன் தன்மை மற்றும் அளவுகள், எல்லையை குறித்து வரைபடம் தாக்கல் செய்ய மனுதாரர் மனுவில் கோரியுள்ள காரணங்கள் திருப்திகரமாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) மேலே விவாதித்த சங்கதிகளை பரிசீலனை செய்கையில், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் இம்மனு தள்ளபடி செய்யப்படுகிறது.

**முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

order uploded on 07.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.07 16:58:33 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

order uploded on 07.02.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.02.07 16:58:39 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**இ.ம.எண்.4/2024 அதன்**

**அ.வ.எண்.313/2024**

வரைவு – உத்தரவு

07.02.2026.